முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2025 சனவரி

## (203) வணிகச் சட்டம்

(Business Law)

2025-02-01
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 08
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.6** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றுள் அடிப்படை உரிமைகள் தொடர்பான நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிமன்றம் எது?

(1) உயர் நீதிமன்றம் (Supreme Court). (2) மாவட்ட நீதிமன்றம்.
(3) மேல் நீதிமன்றம் (High Court). (4) மேன்முறையீட்டு நீதிமன்றம்.

**1.2** கீழ்வருவனவற்றில் பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின்படி, கொள்வனவாளருக்குக் கிடைக்கக்கூடிய பரிகாரமாக (remedy) அமைவது எது?

(1) பற்றுரிமை.

(2) மீள்விற்பனை உரிமை.

(3) ஏற்காமைக்கான நடவடிக்கை.

(4) குறிப்பிட்ட செயலாற்றுகையைப் பெற்றுக் கொள்ளல்

**1.3** பின்வருவனவற்றில் எது இலங்கைச் சட்ட முறைமையில் காணப்படும் சட்டத்தின் தோற்றுவாயாக (source of Law) இருக்கிறது?

(1) அரசியலமைப்பு. (2) வழக்காறுகள்.

(3) நீதித்துறை முன்மாதிரிகள். (4) மேற்கூறிய யாவும்.

**1.4** இலங்கை முதலீட்டுச் சபையின் (BOI) கீழ்வரும் அடிப்படைத் தொழிற்பாடுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

**(a)** வணிகங்களின் பெயர்களைப் பதிவு செய்தல்.

**(b)** செயற்றிட்ட முன்மொழிவுகள் பற்றி முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடல்களை நடத்துதல்.

**(c)** வரி மற்றும் ஏனைய நிவாரணங்களை வழங்குதல்.

மேலுள்ளவற்றில், BOI தொடர்பான சரியான தொழிற்பாடு / தொழிற்பாடுகளாவன :

(1) **(a)** மாத்திரம். (2) **(b)** மாத்திரம்.

(3) **(a)** யும் **(b)** யும் மாத்திரம். (4) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.

**1.5** பின்வருவனவற்றில் மாற்றத்தகு சாதனம் (negotiable instrument) எது?

(1) நாணயக் கடிதம். (2) வார்நாமம்.

(3) வாக்குறுதிச் சீட்டுகள். (4) நிலையான வைப்புச் சான்றிதழ்கள்.

**1.6** சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் பின்வரும் ஆவணங்களைக் கவனத்திற் கொள்க :

**(a)** காப்புறுதிச் சான்றிதழ்

**(b)** வார்நாமம்

**(c)** விலைப்பட்டியல் (Invoice)

மேலுள்ளவற்றில் கிரயம், காப்புறுதி மற்றும் கப்பற்கேள்வு (CIF) உடன்படிக்கை ஒன்றில் விற்பனையாளரால் கொள்வனவாளருக்குச் சமர்ப்பிக்கப்படும் ஆவணம் / ஆவணங்களாவன :

(1) **(a)** மாத்திரம். (2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய யாவும்.

(02 புள்ளிகள் வீதம், 12 புள்ளிகள்)

*இல. **1.7** தொடக்கம் **1.9** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவு செய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.7** மாற்றுண்டியல் கட்டளைச் சட்டத்தின்படி, கொடுப்பனவுக்கான உரிய சமர்ப்பித்தலின் பேரில் உண்டியல் செலுத்தப்படுவதற்கு மேலொப்பமிடுபவர் (endorser) பொறுப்பாகும்.

**1.8** முகவர் ஒருவருக்கு வழங்கப்படும் அதிகாரம் எழுத்துபூர்வமாக மாத்திரமே வெளிப்படுத்தப்படுகிறது.

**1.9** கப்பற் செலவற்ற (Free On Board - FOB) உடன்படிக்கை ஒன்றில், கொள்வனவாளரால் பொருள்கள் பெற்றுக் கொள்ளப்படும் வரை, ஏற்படுகின்ற போக்குவரத்துக் கட்டணங்கள், சரக்கு ஏற்றுவதக்கான கட்டணங்கள் மற்றும் ஏற்றுமதித் தீர்வை என்பவற்றை விற்பனையாளரே தாங்கிக்கொள்ள வேண்டும். (01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

*இல. **1.10** தொடக்கம் **1.14** வரையான வினாக்களுக்கான குறுகிய விடைகளை, உங்களுடைய விடைப் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதவும்.*

**1.10** 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினிக் குற்றங்கள் சட்டத்தின் கீழ் இனங்காணப்பட்டுள்ள இரண்டு (02) பிரதான குற்றங்களைக் (offences) குறிப்பிடுக.

**1.11** வெற்றுப் புறக்குறிப்பு (blank endorsement) என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

**1.12** பொருள்கள் விற்பனை ஒப்பந்தமொன்றில், விலை நிர்ணயிக்கப்படும் இரண்டு (02) முறைகளைக் குறிப்பிடுக.

**1.13** மாற்றுண்டியலொன்று நிறைவேற்றப்படுகின்ற (discharged) இரண்டு (02) வழிகளைக் (ways) குறிப்பிடுக.

**1.14** சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் இரண்டு (02) கொடுப்பனவு முறைகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

**ரவினி** என்பவர் அவருடைய வியாபாரத்திற்காக கடன் அடிப்படையில் **சில்வா** என்பவரிடமிருந்து ரூபா 2 மில்லியன் பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளார். நாட்டில் நிலவிய மோசமான பொருளாதார நிலைமைகள் காரணமாக, **ரவினி**யின் வியாபார வருமானம் குறைவடைந்ததால், அவர் தனது கடனை அடைப்பதற்கு ஒரு வருட கால அவகாசம் வழங்குமாறு **சில்வா**விடம் கோரியிருந்தார். **ரவினியின்** ஆயுள் மீதான ஆயுள் காப்புறுதி ஒன்றை தான் பெற்றுக்கொள்ள முடியுமென எண்ணி, **ரவினியின்** கோரிக்கையை **சில்வா** கவனத்திற் கொண்டிருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **ரவினியின்** ஆயுள் மீதான ஆயுள் காப்புறுதியை **சில்வா** பெற்றுக்கொள்ள முடியுமா என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) கீழ்வரும் காப்புறுதிக் கோட்பாடுகளை **விபரிக்குக** :

(i) அதியுயர் நன்னம்பிக்கை (Utmost Good Faith). (03 புள்ளிகள்)

(ii) நெருக்கமான காரணம் (Proximate Cause). (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

"புலமைச் சொத்துச் சட்டமானது கண்டுபிடிப்புகள், வடிவமைப்புகள், குறியீடுகள் மற்றும் வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் படங்கள் ஆகியவை உள்ளிட்ட மனதில் உருவாகும் படைப்புகளைப் பாதுகாக்கும் பல்வேறு சட்ட உரிமைகளை உள்ளடக்கியுள்ளது. இந்த உரிமைகள் புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றலை ஊக்குவிப்பதில் முக்கியமானவை ஆகும்".

மேலும், பணச் சலவை நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதற்கும் தடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பணச் சலவைத் தடுப்புச் சட்டத்தையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) பதிவு செய்யப்பட்ட வர்த்தகக் குறியீடொன்றின் (trade mark) உரிமையாளர் அனுபவிக்கின்ற மூன்று (03) உரிமைகளைக் (rights) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின்படி, காப்புரிமையற்ற (not patentable) மூன்று (03) கண்டுபிடிப்புகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) பணச் சலவைத் தடுப்புச் சட்டத்தின்படி, நான்கு (04) சட்டவிரோத செயற்பாடுகளைக் **குறிப்பிடுக.**
(04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

புகழ்பெற்ற காலணித் தயாரிப்பாளரான **நவீன்** என்பவர், நகரின் மத்தியில் கடை ஒன்றை வைத்து, பல்வேறு வகையான காலணிகளையும் விற்பனை செய்து வருகிறார். **மனிஷா** என்பவர் இக்கடையின் நிரந்தர வாடிக்கையாளர் ஆவார். அவர் குறிப்பாக 8 ஆம் இலக்க அளவு கொண்ட ஒரு சோடிக் காலணிகளை **நவீனிடம்** கேட்டுள்ளார். காலணிகள் பற்றி நன்கறிந்த **நவீன், மனீஷா** வாங்கும் காலணிகளின் அளவு உண்மையில் 8 தான் என்பதை உறுதி செய்துகொண்டார். **மனீஷா** காலணிகளைக் கொள்வனவு செய்து, வீட்டில் வைத்து அதனை அணிந்து பார்த்தபோது, அவை உண்மையில் 9 அளவைக் கொண்டதாக இருப்பதை உணர்ந்து கொண்டார். **மனீஷா நவீனைத்** தொடர்பு கொண்டபோது, எந்தத் தவறும் நடக்கவில்லை என்று **நவீன்** உறுதியாகக் கூறியதுடன் உரிய தொகுதியில் உள்ள அனைத்துக் காலணிகளும் அளவு 8 இற்கானவையே எனவும் தெரிவித்திருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **நவீனுக்கு** எதிராக **மனீஷாவுக்கு** இருக்கின்ற சட்ட உரிமைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழான நான்கு (04) உட்கிடை நிபந்தனைகளைக் (implied conditions) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**நுவான்** என்பவர் ஒரு விளம்பர நிறுவனத்தை நடத்திச் செல்கிறார். அவர், பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள ஓர் அரசியல்வாதிக்கு ஒரு புதிய கருப்பொருள் பாடலை (theme song) வடிவமைப்பதற்கு **ருக்ஷா** என்பரை பணிக்கமர்த்தியுள்ளார். **ருக்ஷா,** ஒரு சுயாதீனமான இசைக் கலைஞர் என்பதுடன் அவர் பல்வேறு சேவைநாடுநர்களுக்காகவும் பல்வேறு செயற்றிட்டங்களில் பணியாற்றியுள்ளார். **நுவான்** குறிப்பிட்ட தேவைகள் மற்றும் காலக்கெடு உள்ளிட்ட பாடலுக்கான சுருக்கத்தை **ருக்ஷாவு**க்கு வழங்கியுள்ளார். **ருக்ஷா** அவரது வேலை நேரத்தைத் தேர்வு செய்ய சுதந்திரம் உள்ளதுடன் அவர் தனது சொந்த உபகரணங்கள் மற்றும் மென்பொருளைப் பயன்படுத்தி பாடல் இசையமைக்கும் பணியை நிறைவு செய்துள்ளார். **ருக்ஷா** கருப்பொருள் பாடலை **நுவானிடம்** சமர்ப்பித்ததுடன் **ருக்ஷாவுக்கு** இந்தச் செயற்றிட்டத்திற்காக நிலையான கட்டணமொன்று செலுத்தப்பட்டது.

ஒரு சில மாதங்களின் பின்னர், **நுவான்** தனது நிறுவனத்தின் பல பாடல்களை வடிவமைக்கும் பணியை **ருக்ஷாவுக்கு** வழங்கத் தீர்மானித்ததுடன், அடுத்த ஆறு மாதங்களுக்கு **ருக்ஷா நுவானுக்காக** மாத்திரமே பணியாற்ற வேண்டுமெனவும் பரிந்துரை செய்திருந்தார். அத்துடன் **நுவானால்** வழங்கப்படும் ஒரு தொகுதி வழிகாட்டல்களை **ருக்ஷா** பின்பற்ற வேண்டுமெனவும், **நுவானின்** ஸ்ரூடியோ உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும் எனவும் முன்னேற்றம் தொடர்பில் வாராந்தம் **நுவானுக்கு** அறிக்கையிட வேண்டுமெனவும் அவர் மேலும் முன்மொழிந்திருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) தொழிற் சட்டத்தின் கீழ், **ருக்ஷா** ஓர் ஊழியராகவா அல்லது ஒரு சுயாதீன ஒப்பந்ததாரராகவா வகைப்படுத்தப்படுவார் என்பதை **விபரிக்குக.** (07 புள்ளிகள்)

(b) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் (ETF) சட்டத்தின்படி, ETF இன் மூன்று (03) பிரதான தொழிற்பாடுகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**Island Machinery Ltd.** என்பது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனி ஆகும். **Island Machinery Ltd.** இன் அமைப்பக விதிகளுக்கு இணங்க, கம்பனியின் முதன்மையான நோக்கம் தொழில்துறை இயந்திரங்களைத் தயாரித்து விற்பனை செய்வதில் ஈடுபடுவதாகும். இதில் அத்தகைய உபகரணங்களின் தயாரிப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம் ஆகியன உள்ளடங்குகின்றன.

**Island Machinery Ltd.** இன் அமைப்பக விதியில், கம்பனி அங்கத்தவர்களுக்கு இடையே ஏற்படுகின்ற ஏதாவது பிணக்குகள் தீர்ப்பாயம் ஊடாகத் தீர்க்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்ற ஒரு சரத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சமீபத்திய உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியால் ஏற்பட்ட பொருளாதார சவால்களுக்கு விடையிறுக்கும் வகையில், **Island Machinery Ltd.** இன் ஒரு பணிப்பாளரான **அனில்,** ஒவ்வொன்றும் 50,000 அமெரிக்க டொலர் கிரயமான நான்கு உயர்தர கோப்பி தயாரிக்கும் இயந்திரங்களை நிதியிடல் ஏற்பாட்டின் ஊடாகக் கொள்வனவு செய்வதற்கு முன்மொழிந்ததுடன், இந்தக் கோப்பி தயாரிக்கும் இயந்திரங்களை கோப்பி விற்பனை செய்யும் கடைகளுக்கு குத்தகைக்கு வழங்கி, வாடகை வருமானத்தை ஈட்டுவதற்கும் பரிந்துரை செய்திருந்தார்.

**Island Machinery Ltd.** இன் ஒரு பிரதான பங்குதாரரான **சந்திரா** என்பவர், இந்த முன்மொழிவுடன் உடன்படவில்லை என்பதுடன் அவர் கம்பனிக்கு எதிராக சட்ட நடவடிக்கையைத் தொடங்கியுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேற்படி விவரணம் தொடர்பில், **Island Machinery Ltd.** இன் அமைப்பக விதிகளின் செல்லுபடித் தன்மையை **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(b) **Island Machinery Ltd.** இன் பணிப்பாளர் ஒருவரின் மூன்று கடமைகளைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 07

(A) **சஞ்ஜய்** என்பவர் இரத்தினபுரியில் **GreenTech** என்ற பெயரில் வணிகம் ஒன்றை நடத்திச் செல்கிறார். சுற்றுச்சூழலுக்கு நேயமான (eco-friendly) மூங்கில் தளபாடங்களை உற்பத்தி செய்வதில் இவருடைய கம்பனி நிபுணத்துவம் வாய்ந்ததாக உள்ளது. சனவரி 8 ஆந் திகதி, நுவரெலியாவில் வசிக்கும் **பிரியந்த** என்ற மூங்கில் வழங்குநர் ஒருவரை **சஞ்ஜய்** தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ஒரு கிலோகிராம் மூங்கில் ரூபா 5,000/- விலைப்படி 500 கிலோகிராம் மூங்கிலை வாங்குவதாக கொடைமுனைவு (offer) செய்திருந்தார். இரத்தினபுரியில் உள்ள தனது அலுவலகத்திற்கு தபாலில் கடிதம் ஒன்றை அனுப்புவதன் மூலம் இந்தக் கொடைமுனைவை **பிரியந்த** ஏற்றுக் கொண்டுள்ளாரா அல்லது நிராகரித்துள்ளாரா என்பதை தெரிவிக்குமாறு **சஞ்ஜய்** வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்தக் கொடைமுனைவை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்து சனவரி 10 ஆந் திகதி காலையில் **பிரியந்தவினால்** தபாலில் இடப்பட்ட கடிதம் **சஞ்ஜய்**யின் அலுவலகத்திற்கு சனவரி 13 ஆந் திகதி கிடைத்திருந்தது. இதற்கிடையில், மற்றுமொரு மூங்கில் வழங்குநரான **ரமேஷ்** என்பவர் **சஞ்ஜய்**யினுடைய கொடைமுனைவு பற்றிக் கேள்வியுற்று, அதனை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தார். சனவரி 10 ஆந் திகதி மாலை, **ரமேஷ் சஞ்ஜய்** ஐச் சந்தித்து, ஒரு கிலோகிராம் ரூபா 4,500/- என்ற குறைந்த விலையில் 500 கிலோகிராம் மூங்கிலை வழங்குவதற்கு உடன்பட்டார். கேட்டுக் கொண்டதன்படி, **ரமேஷ்** மூங்கிலை வழங்கினார். பின்னர், **சஞ்ஜய் ரமேஷ்"டனான** ஒப்பந்தத்தை வெளிப்படுத்தி, **பிரியந்தவின்** மூங்கிலை நிராகரித்தார். **பிரியந்த** தற்போது **சஞ்ஜய்க்கு** எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசித்து வருகிறார்.

மேலும், **சஞ்ஜய்** தனது மூங்கில் செயன்முறைப்படுத்தலில் இருந்து எடுக்கப்பட்ட பிரித்தெடுப்புகளை, ஒரு விசேட வகை மக்கும் தன்மை வாய்ந்த பொதி செய்யும் பைகளாகப் பயன்படுத்தலாம் என்பதைக் கண்டுபிடித்தார். இதற்கு அவர் **"EcoWrap"** எனப் பெயரிட்டார். அவர் இந்தத் தயாரிப்பை கீழ்வரும் வெகுமதி அறிவிப்பு ஒன்றுடன் விளம்பரப்படுத்தினார்.

***"EcoWrap இன் பயன்பாட்டை சவாலுக்கு உட்படுத்தும் எந்த நபருக்கும்***

***ரூபா 100,000 வெகுமதி வழங்கப்படும்,***

***நீங்கள் அறிவுறுத்தல்களை சரியாகப் பின்பற்றுவீர்கள் என எதிர்பார்க்கப்படுகிறது."***

பொதி செய்தல் வடிவமைப்பாளரான **குமார** என்பவர் **GreenTech** இடமிருந்து **EcoWrap** இனைக் கொள்வனவு செய்து, **GreenTech** இனால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, சேதன உற்பத்திப் பொருள்களைப் (organic product) பொதி செய்ய அதனைப் பயன்படுத்தினார். துரதிஷ்டவசமாக, பொதியானது ஒரு வாரத்தினுள்ளேயே சிதைவடைந்து, பொருள்களின் இழப்பிற்கு வழிவகுத்தது.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) ***சஞ்ஜய்யின்*** தொலைபேசி அழைப்பு ***பிரியந்தவிற்கு*** ஒரு வலிதான கொடைமுனைவை (valid offer) அளித்ததா என்பதை ***விபரிக்குக.*** (03 புள்ளிகள்)

(b) ***பிரியந்த, சஞ்ஜய்க்கு*** எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை ***ஆராய்க.*** (06 புள்ளிகள்)

(c) ***சஞ்ஜய்க்கு*** எதிராக ***குமார*** சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை ***ஆராய்க.*** (06 புள்ளிகள்)

(B) ***ரஜீவ்*** என்பவர் ஒரு தோட்ட உரிமையாளர் ஆவார். அவர் ***சமன்*** என்பவருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அவர் ஒரு வருடத்திற்கு வெளிநாடு செல்லவுள்ளதாகவும், அந்தக் காலப்பகுதியில் ***சமன்*** தனது தோட்டத்தை முகாமை செய்து, நிலுவையிலுள்ள கொடுப்பனவுகளையும் வசூலித்து, தோட்டத்தையும் பராமரிக்க வேண்டுமெனவும் தான் எதிர்பார்ப்பதாக ***ரஜீவ்*** தெரிவித்திருந்தார். ஏதாவது சிக்கல்கள் எழும்போதும், தோட்டத்தின் நிலை பற்றியும் தொடர்ந்து தனக்கு அறிவிக்கும்படி ***ரஜீவ் சமனுக்கு*** அறிவுறுத்தியுள்ளார். மேலும், ***சமன்*** கடன் அடிப்படையில் கொள்வனவுகளை மேற்கொள்வதை ***ரஜீவ்*** வெளிப்படையாகவே தடை செய்தார்.

பின்னர், ***சமன் ரஜீவைச்*** சந்தித்து, தோட்டத்தின் சாவிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொண்டார். தடை காணப்பட்ட போதிலும், தோட்டச் செயற்பாடுகளுக்கு தேவையான சில பொருள்களை கடன் அடிப்படையில் ***நிமல்*** என்பவரிடமிருந்து ***சமன்*** கொள்வனவு செய்திருந்தார். ***சமன்*** தோட்டத்தின் ஒரு பகுதியில் ஒரு சிறிய காய்கறித் தோட்டத்தை உருவாக்கியதுடன், அதிலிருந்து வருமானமாக மாதமொன்றிற்கு ரூபா 120,000/- ஐச் சம்பாதிக்கிறார். ஆனால் இது பற்றி அவர் ***ரஜீவ்*** இற்கு தெரிவிக்கவில்லை.

விடயங்களை மேலும் சிக்கலாக்கும் வகையில், ***சமன்*** தனது சில பொறுப்புகளை ***ரஜீவுக்குத்*** அறிவிக்காமல், உள்ளூர் வாசியான ***கமல்*** என்பவரிடம் கையளித்திருந்தார். ***கமல்*** தனது சொந்த விருப்பத்தின் பேரில், தோட்டத்தின் பராமரிப்புக்காக ***நிமலிடமிருந்து*** கடன் அடிப்படையில் மேலும் கொள்வனவுகளை மேற்கொண்டிருந்தார்.

இறுதியில், ***ரஜீவ்*** தோட்டத்தைப் பற்றிக் கேள்விப்பட்டபோது, அது பற்றி ***சமனிடம்*** விசாரித்ததுடன் ***சமனுக்கு*** கடன் அடிப்படையில் பொருள்களை வாங்க அதிகாரம் இல்லை என்பதை எடுத்துக்கூறி, ***நிமலுக்கான*** தொகையை செலுத்த வேண்டாம் என வலியுறுத்தினார். அதிகாரமின்றி ***கமலுக்கு*** கடமைகள் கையளிக்கப்பட்டமை குறித்தும் ***ரஜீவ்*** கவலை கொண்டிருந்தார்.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) ***சமன் ரஜீவின்*** முகவர் என்ற வகையில் தனது கடமையை மீறியுள்ளாரா என்பதை ***ஆராய்க.*** (06 புள்ளிகள்)

(b) ***நிமல்*** தனக்கு வரவேண்டிய தொகையை வசூலிப்பதற்கான சட்ட உரிமைகள் பற்றி ***ஆராய்க.*** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |